1975 ஏப்ரல் 3]

திரு. கோவை செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்துள்ள விளக்கக் குறிப்பில் நாட்டு வெங்காயம், பெல்லாரி வெங்காயம், புதுரக வெங்காயங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப் போன்ற விவசாயிகளுக்கு சிலோன் மார்க்கட் விழும்போது வெங்காயத்தை வாங்க ஆள் இல்லை. அதை ஸ்டாக் செய்யவும் முடியாது. காய்ந்து விடும்.

"வெங்காயம் சுக்கானுல் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச் சரக்கை
மங்காத சீரகத்தைத் தந்திடேல் தேடேன் பெருங்காயத்தை
ஓரகத்துச் செட்டியாரே"

என்பார்கள். ஆகவே, வெங்காயத்தின் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அல்லது பதப்படுத்தவாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இலங்கைக்கு அதிகமாக ஏற்றுமதி செய்வது, பதப்படுத்தி வைப்பது என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைக் கூற முடியும். இப்போது இந்தப் புது ரக வெங்காயத்தைப் பயிரிடுவது பற்றிய விவரங்கள்தான் இருக்கின்றன. இதை ஊடு பயிராக சில சில இடங்களில் பயிரிட்டு 60 நாட்களில் நல்ல பலன் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும், விவசாய மக்களும் இதைப் பயிரிட முன்வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 547 . . .

(உறுப்பினர்கள் திரு. நா. வீராசாமி, திரு. கு. காமாட்சி மற்றும் சிலர் எழுந்து நின்றனர்)

அரை மணி நேரத்தில் ஆறு கேள்விகளுக்குத்தான் விடை அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : ஏதாவது இதைப் பற்றி விளக்கம் வேண்டுமென்றால் என்னிடம் தனியாகக் கூடக் கேட்கலாம்.

## *Production of green manure*

• 547 Q.—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the

Government to produce green manure on a large scale in the State ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, ரசாயன உரத்தின் விலை ஒன்றிலிருந்து மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. அதன் விலை உயர்வைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாத நிலையில் தமிழ்நாட்டில் தழை உரத்தை ஏராளமாகத் தயாரித்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா? தழை உரம் தயாரிக்கக்கூடியவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கவும் மற்ற முறைகளில் ஊக்குவிக்கவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தழை உரத்திற்கான விதைகளுக்காக 20 லட்சம் ரூபாய் அளவுக்கு செலவு செய்து விதைகளை லாபமும் இல்லாமல் நட்டமும் இல்லாமல் விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறோம். ஏரிக்கரை, கால்வாய்க் கரை போன்ற இடங்களில் பூவரச மரம்—புங்கமரம் என்று சொல்லுவார்கள்—வளர்ப்பதற்கு ஊராட்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தழை உர விதைகள் இலவசமாகக் கொடுப்பது பற்றிப் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தழை உரம், கம்போஸ்ட் உரம் போதுமான அளவு கிடைக்க வாய்ப்பு இல்லாத பகுதியில் அரசாங்கமே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா? ஏரிக்கரை போன்ற பொதுவான இடங்களில் வளர்க்க அரசாங்கமே பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்படுமானால் அதிக அளவில் தழை உரங்களை வளர்க்க வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விக்கு அமைச்சர் அளித்த பதிலிலிருந்து மேற்கொண்டு தகவல் ஏதும் கேட்கலாமே தவிர, பொதுவான யோசனைகளைச் சொல்லுவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்தக்கூடாது. விவசாய மானியத்தில் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷம், 10 நிமிஷம் என்று பேசும்போது இப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லலாம்.

---

@ 157-158-ம் பக்கங்களில் இணைப்பு 689–691 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*1975 ஏப்ரல் 3]*

**திரு. கே. என். குமாரசாமி:** ஆகவே, இந்த மாதிரி தழை உரங்கள் வளர்க்கப்படுவது பஞ்சாயத்து மூலமாகச் செய்யப் படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

**திரு. கு. இராசமாணிக்கம்:** ரசாயன உரம் பற்றுக்குறையாக இருக்கும் நேரத்தில் வயல்களில் சஸ்பேனியா, டேஞ்சா, அவரி போன்றவற்றைப் போட்டால் ஐந்தாறு அடி வருவதற்குள்ளாக பூக்கின்ற நேரத்தில் வயல்களில் சாகுபடி அழித்துவிடப்படுகிறது. வேளாண்மைத் துறை அதிகாரிகள் வயல்களில் விதைக்க இதைச் சிபாரிசு செய்கிறார்கள் என்றாலும் தேவையான அளவுக்கு விதைகள் கிடைக்கவில்லை. விதைகள் அதிகம் கிடைக்கவும் வேளாண்மை செய்கின்ற நேரத்தில் அழித்து விடுகின்ற காரணத்தால் தனியாக விதை நாற்றங்கால்களுக்காக மானியம் கொடுத்து விதைகளை உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே, அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஏறத்தாழ 2,350 டன் அளவுக்கு விதைகள் கொடுக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. விதைகள் கிடைக்கவில்லை என்று இதுவரை புகார் வரவில்லை. மேலும் தேவையானால் அருகாமையில் இருக்கும் வேளாண்மை டெப்போவில் கேட்டுப் பெறலாம். கூடியவரையில் கம்போஸ்ட் நல்ல உரமாக இருக்கிறது என்பதால் அர்பன் கம்போஸ்ட் நகராட்சிகளில் கிடைக்கின்ற கம்போஸ்டை எடுத்து நைட்ரஜன் சேர்த்து விவசாய மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

**திரு. தி. பொன்னுமலை:** தற்போது யூரியா, அம்மோனியா போன்ற ரசாயன உரங்களைப் போட்டால் நிலத்தின் சத்து குறைந்து விடுகிறது என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள், ஊராட்சிகளின் ரெவின்யூ நிலங்கள், மற்ற புறம்போக்கு நிலங்களில் செஸ்பேனியா போன்ற செடிகளை வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அரசாங்கச் செலவிலேயே அதை வளர்த்து விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தழை உரங்களை அரசாங்கமே உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் கொடுக்கும் திட்டம் இல்லை. தழை உரங்களுக்கான விதைகள் கொடுக்கும்